**(சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**இ.பி. எண். 99/2022 இன் ஓ.எஸ்.எண்.156/2019** **நாள்.16.03.2026**

2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 16 நாள் மனுதாரர் தரப்பு 3 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | உமா | தொழில் | |
| த. பெ./க.பெ. | ஆதிமூர்த்தி | சாதி | |
| கிராமம் | நடுப்பட்டு | மதம் | இந்து |
| வட்டம் | ஆலம்பூண்டி மதுரா, செஞ்சி | வயது | 36 |

**ம.சா.3**

**குறுக்கு விசாரணை**

நான் செஞ்சி நகரில் வசித்து வருகிறேனா என்றால் ஆமாம். நான் என் கணவருடன் கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து வாழ்ந்து வருகிறேனா என்றால் ஆமாம். எனது பிரமாண வாக்குமூலத்தில் தந்தையின் பெயரை தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மனுதாரரின் தம்பி சேத்பட் ரோட்டில் ஒரு கோயில் கட்டியுள்ளார் என்றால் சரிதான். அந்த கோயிலில் நான் வேலை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. அந்த கோயில் கட்டியவரின் அண்ணன் என்பதால் மனுதாரருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கு எந்த சர்வே எண்ணில் எவ்வளவு பரப்பளவில் வீடு உள்ளது என்றும், அந்த சொத்து அவர் பெயரில் தான் உள்ளதா என்பது குறித்தும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆனால் வீடு உள்ளது. எதிர்மனுதாரர் நித்தீஷ்பாய் என்பவருடைய வணிக வளாகத்தில் ஒரு கடையை நடத்தி வருகிறார். அந்த கடையை எதிர்மனுதாரர் தான் நடத்தி வருகிறாரா என்றும், அதற்கு அவர் தான் வாடகை செலுத்துகிறாரா என்றும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் நெல் வியாபாரம் செய்ய உரிமம் எதுவும் பெற்றுள்ளரா என்று தெரியுமா என்றால் தெரியாது. வியாபாரம் செய்கிறார். எதற்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் எதிர்மனுதாரர் நெல் வியாபாரம் செய்கிறாரா இல்லையா என்றும், அங்கு வசிக்கிறாரா இல்லையா என்றும் தெரிவிப்பதற்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என்னை சாட்சியம் அளிக்க யார்

அழைத்தது என்றால் மனுதாரர் தான் அழைத்தார். எனவே மனுதாரர் சொன்னதை சாட்சியம் அளிக்கிறேனா என்றால் விபரம் கேட்டார். அதைப்பற்றி சாட்சியம் அளிக்கிறேன்.